**SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMIL NADU, CHENNAI-84**
**PRESS RELEASE**

**"Khelo – India National Programme for Development of Sports"**
**Valedictory Function**

The Sports Development Authority of Tamil Nadu on behalf of Government of Tamil Nadu conducted the National Level Khelo India Football competitions held at SDAT Jawaharlal Nehru Stadium, SDAT Integrated Sports Complex and SDAT Nehru Park Sports Complex, Chennai, Veterinary College Ground, Chennai, Tamil Nadu from 20.02.2017 to 24.02.2017 under the scheme of "**Khelo – India National Programme for Development of Sports"** during the year 2016 – 17 for both boys and girls under 14 and 17 category.

About 1,227 Players and Officials from 21 States of India were participated in this Competition.

The valedictory function had held at SDAT Jawaharal Nehru Stadium, Chennai on 24.02.2017 at 5.00 P.M. Hon'ble Minister for School Education, Sports and Youth Welfare **Thiru. K. A. Sengottaiyan,** had distributed the medals, certificates and Trophies to the winners. **Dr. Rajendra Kumar**, I.A.S., Principal Secretary to Government, Youth Welfare and Sports Development Department had delivered presidential address. **Thiru. Ashok Dongre**, I.A.S., Principal Secretary / Member Secretary, Sports Development Authority of Tamil Nadu had delivered welcome address. **Thiru. A. Santhan**, Deputy General Manager/General Manager (i/c) had delivered vote of thanks. **Thiru. A. K. Datta,** Project Officer, Ministry of Youth Affairs and Sports, New Delhi, Sports Development Authority of Tamil Nadu higher officials, All India Players Team Managers and Coaches were present at the function.

Encl: The final results attached herewith.

**PRESS RELEASE – SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMIL NADU, CHENNAI -84**

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84.

## பத்திரிக்கைச் செய்தி

**“கேலோ இந்தியா தேசிய அளவிலான கால்பந்து விளையாட்டுப் போட்டிகள்”**

**2016–17**ம் ஆண்டிற்கான கேலோ இந்தியா தேசிய அளவிலான கால்பந்து விளையாட்டுப் போட்டிகள் 20.02.2017 முதல் 24.02.2017 வரை சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கிலும், ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் உள்ள பி மைதானத்திலும், நேரு பூங்கா விளையாட்டு வளாகத்திலும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ கல்லூரி மைதானத்திலும், இருபாலருக்கும் நடைபெற்றது. இப்போட்டிகளில், **14** மற்றும் **17** வயதிற்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இப்போட்டிகளில், இந்தியாவின் **21** மாநிலங்களிலிருந்து சுமார் 1,227 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அணி மேலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்த தேசிய அளவிலான கால்பந்து விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழா **24.02.2017** பிற்பகல் **5.00** மணியளவில், சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளி கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர். **திரு. கே. ஏ. செங்கோட்டையன்** அவர்கள் சிறப்புரையாற்றி வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கணைகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு முதன்மைச் செயலர் **முனைவர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப.** அவர்கள் தலைமையுரை வழங்கினார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலர்/உறுப்பினர் செயலர் **திரு. அஷோக் டோங்ரே, இ.ஆ.ப.** அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணை பொது மேலாளர் / பொது மேலாளர் (பொ) திரு. அ. சாந்தன் அவர்கள் நன்றிரை வழங்கினார்கள்.

மேலும், இந்நிகழ்ச்சியில், மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சக திட்ட அலுவலர் **திரு. R.K. தத்தா,** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உயர்அதிகாரிகள், அனைத்திந்திய விளையாட்டு வீரர், வீராங்கனைகள், அணி மேலாளர்கள் மற்றும் பயிற்றுநர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

இணைப்பு: வெற்றி பெற்ற வீரர்/வீராங்கனைகளின் பட்டியல்

**செய்தி வெளியீடு: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை–84/**

முதன்மைச் செயலர் /
உறுப்பினர் செயலர்.




2016–17 தேசிய அளவிலான கேலோ இந்தியா கால்பந்து விளையாட்டுப் போட்டியின் நிறைவு விழாவில் திரு. கே. ஏ. செங்கோட்டையன் மாண்புமிகு பள்ளி கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்கள் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்கள். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு முதன்மைச் செயலர் முனைவர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப., திரு. அஷோக் டோங்கரே, இ.ஆ.ப, முதன்மைச் செயலர்/ உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திட்ட அலுவலர், மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உயர் அதிகாரிகள்.